

# புனித லூர்து மாதா தேவாலயம்



45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா
**பங்கின் குருவானவர்: அருள் தந். ரோபட் டேனியல்**
**மறைத்திரு திருத்தொண்டர் சுந்தனசாமி பீட்டர்**
Tel: 05-5279349 Fax: 05-5276671
அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org

**திருத்தந்தையின் கருத்து** : **இளையோர், குறிப்பாக இலத்தீன் அமெரிக்காவில் உள்ளோர், மரியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி நற்செய்தியின் மகிழ்ச்சியை உலகிற்கு பரப்பிட ஆண்டவரின் அழைப்புக்கு பதிலளிக்க வேண்டுமென்று**

**ஜனவரி மாத கரு** : **கிறிஸ்துவில் நம்மை இணைக்கிறது**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜன 13 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | ஆண்டவரின் திருமுழுக்கு<br>ஆண்டவரின் திருமுழுக்கு |
| ஜன 14 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| ஜன 17 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | புனித அந்தோணி |
| ஜன 18 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| ஜன 19 சனி | காலை 6.30<br>மாலை 4.30 | திருப்பலி (ஆ)<br>திருமணம் (த) | பொதுக்கால வாரநாள்<br>நாரன்ஸ் த/பெ குப்பன் & எவலின் த/பெ சவரிமுத்து |
| ஜன 20 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>காலை 11.00<br>மாலை 5.30 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ம)<br>நவநாள்/ திருப்பலி | பொதுக்கால 2ஆம் ஞாயிறு<br>பொதுக்கால 2ஆம் ஞாயிறு<br>பொதுக்கால 2ஆம் ஞாயிறு<br>புனித செபஸ்தியார் சிற்றாலயம், முனிசிபல் |

**பங்கு நடவடிக்கைகள்**

| ஜன 13 ~ 19 | மாலை 7.30 | புலூமாதே | அதிச வாரம் |
|---|---|---|---|
| ஜன 13 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>பிற்பகல் 3.30 | பெர். மையம்<br>பெர். மையம்<br>பங்கு வளாகம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>பொங்கல் கொண்டாட்டம் |
| ஜன 14 திங் | மாலை 7.45 | பெர். மை 2-2 | RCIA |
| ஜன 15 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை செபம் |
| ஜன 17 வியா | மாலை 7.00<br>மாலை 7.45 | ஆலயம்<br>பெர். மை 2-2 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA |
| ஜன 19 சனி | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாயமாதா நவநாள் |
| ஜன 20 ஞா | காலை 8.30<br>காலை 10.30 | பெர். மையம்<br>பெர். மையம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ) |

<u>2019 ஜனவரி மாத திருமணம்</u>

ஜன 26 காலை 11.00 சடங்கு (ஆ) மார்ட்டின் போல் த/பெ அமலோற்பநாதன்& ரெஸ்விந்தர் கோர் த/பெ சர்ஜித் சிங்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் அல்லது திருத்தொண்டரிடம் தெரிவியுங்கள்

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. பங்கு திருவிழா நவநாள் திருப்பலிகள்:**

- புனித லூர்து அன்னை திருவிழா கொண்டாட்டம் 1 பிப் ~ 11 பிப் 2019 வரை நடைபெறும். இந்த ஆண்டு கவனம்/ கருத்து பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் "இவாஞ்சேலி ஃகாவ்டியம்" (நற்செய்தியின் மகிழ்ச்சி) என்ற சுற்று மடலின் அடிப்படையில் அமையும். பங்கு மாநாட்டில் நான் கூறியது போல் நவநாள் திருப்பலிகள் திருச்சபையின் போதனையையும், செல்லும் திசையையும் இன்னும் ஆழமாக நாம் உற்று நோக்க செய்யும் மறைக்கல்வியாக இருக்க வேண்டும். திருப்பலிகள் 2 மொழிகளில் கொண்டாடப்படும் (தமிழ், ஆங்கிலம்). மேல் விபரங்கள் திருவிழா துண்டு பிரசுரங்களின் வழி தெரிவிக்கப்படும். நீங்கள் இந்த ஆவணத்தை அதிகாரப்பூர்வ வத்திக்கான் இணையத்தளத்திலிருந்து பதிவிரக்கம் செய்யலாம். 11 பிப் 2019ல், நாம் உலக நோயாளர் தினத்தை இரவு 7.30க்கு நவநாள், திருப்பலி, நோயில்பூசுதலுடன் கொண்டாடுவோம்.
- பங்கு திருவிழாவிற்கு பொருள் (உணவு, பானம்), நிதி நன்கொடை வழங்க விரும்பினால் பங்கு அலுவலகத்தில் செய்யலாம்.

**2. தலைவர்களுக்கான மாதாந்திர உருவாக்கம்**: இந்த ஆண்டு 2019இல் நாம் பின்வரும் கருத்துகளில் கவனம் செலுத்துவோம்: அ) **வீட்டிலும், மருத்துவமனையிலும் இருக்கும் முதியோர்களை பராமரிக்க தேவைப்படும் மருத்துவ உதவிகளும், அது பற்றிய தகவல்களும் ஆ) மருத்துவமனையிலும், வீடுகளிலும் மரித்துக் கொண்டிருக்கிற, மரித்தவர்களை கையாளுவது இ) பாடுகள்-மரணம்-உயிர்தெழுதல் பற்றிய புரிந்துணர்வும், கத்தோலிக்க இறையியலும் (நம்பிக்கையின் இறையியல்) ஈ) வீட்டில்/ மருத்துவமனையில்/ மற்ற பகல்நேர பராமரிப்பு மையங்களில் மேய்ப்புப்பணி கவனிப்புகள் உ) முதுமை அடையும் வழிமுறைகள் பற்றிய சிந்தனை ஊ) அடக்க சடங்குகளும் இறையியலும்**. மாதாந்திர அமர்வின் (சுமார் 90 நிமிடம்) பேச்சாளர்கள் மருத்துவ துறையில் மேய்ப்புப்பணியில் ஈடுபட்டுள்ளோர், திருப்பணியாளர்கள், திருத்தொண்டர் ஆகியோர். இந்த மாதாந்திர தகவல் நேரத்திற்கு அதிகமானோர் வந்து கலந்து கொள்ள நான் அழைக்கிறேன். ஒவ்வொரு அதிச/ பணிக்குழு தலைவர்களும் தங்கள் குழுவிலிருந்து இன்னும் 5 உறுப்பினர்களை இந்த அமர்விற்கு அழைத்து வர வேண்டும். எல்லா நற்கருணை பணியாளர்களும் வீட்டிலுள்ள முதியோர்களுடன் நேரடியாக பழகுவதால் இந்த அமர்வில் கலந்து கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**3. நன்றி**: அ) கிறிஸ்துமஸ் மரத்தை அமைத்த ELF குழுவினருக்கு ஆ) குடிலைக் கட்டிய கிழக்கு திசை/ புபிஅ சமூகங்களுக்கு இ) 2018 கிறிஸ்துமஸ் இசை இரவு குழுவுக்கு நன்றி!.

**4. உயிரோடிருப்பது நல்லது:** (தன் முனைப்பு சொற்பொழிவு/ கருத்தரங்கு): 3 படைப்பாளர்கள்: **Dato' Sri Dr. Edmund Santhara J.P, Mr. Edwin Telle and Mr. Kenneth koo** தன் முனைப்பு சொற்பொழிவுகள் வழங்குபவர். இது இப்பங்கின் லூர்து மண்டபத்தில் 20 ஜன 2019 (ஞாயிறு) காலை 10.45 முதல் நண்பகல் 1.30 வரை நடைபெறும். இது ஆங்கிலத்தில் நடைபெறும். இந்த தன்முனைப்பு எல்லாருக்கும் பொதுவானது, குறிப்பாக இளைஞர்களுக்கு.

**5. குருத்துவ மாணவர் சகோ. ஜோர்ஜ் வைத்தியநாதன்:** சகோ ஜோரஜ் தனது 3 ஆண்டுகள் கல்வியை பினாங்கு குருத்துவ கல்லூரியில் நிறைவு செய்துள்ளார் (1 ஆண்டு ஆயத்த நிலை மற்றும் 2 ஆண்டுகள் தத்துவ கல்வி). இவர் தனது 4 ஆண்டுகள் இறையியல் கல்வியை பிப்ரவரி 2019ல் கூச்சிங்கில் தொடங்குவார். இவரது விடாமுயற்சிக்காக இவரை நாம் பாராட்டுகிறோம். நமது செபத்தில் தொடர்ந்து நாம் அவருக்கு ஆதரவு தருவோம்.

**6. குருத்துவத்திற்கு ஒரு புதிய வேட்பாளர்:** திரு பேட்ரிக் ஹிலரி இவ்வாண்டு 2019ல் பினாங்கு குருத்துவக் கல்லூரியில் இணைய உள்ளார். இவர் பிப்ரவரியில் 3 ஆண்டுகள் கல்வி பயில (1ஆண்டு ஆயத்த நிலை மற்றும் 2 ஆண்டுகள் தத்துவ கல்வி) பினாங்கு செல்வார். அவரது துணிச்சலான முடிவிற்காக அவரை வாழ்த்துவோம், நமது செபத்தின் வழியாக தொடர்ந்து நாம் அவருக்கு ஆதரவு வழங்குவோம்.

**7. 2018 கிறிஸ்துமஸ் பஜனை:** தொகுதிகள்/ அதிசக்களிலிருந்து பஜனைக்குழுவினர் **ரிம 9,378.50** திரட்டியுள்ளனர். எல்லா வருமானமும் ஏழைகளுக்கு அளிக்கப்படும். பெரிய மனதுடன் பங்களிப்பு செய்து எல்லா தொகுதி ஒருங்கிணைப்பாளர்களுக்கும், அதிச தலைவர்களுக்கும், பங்கு மக்களுக்கும் மனமார்ந்த நன்றி. ஏழைகளுக்கான நமது பணி ஒருபோதும் மறக்கப்படாதிருப்பதாக.

**8. மூத்தோர் பணிக்குழு:** அடுத்த ஒன்றுகூடுதல் 22 ஜன 2019 (செவ்) காலை 9.30க்கு பெர். மையத்தில் திருப்பலியுடன் தொடங்கும். 60 வயதுக்கு மேற்பட்ட பங்கு மக்கள் கலந்துக்கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள்.

**9. பங்கு மண்டப மறுசீரமைப்பு:** லூர்து மண்டபத்தை மேம்படுத்தி முழுமையாக மறுசீரமைப்பு செய்துவிட்டோம். இது திருமண வரவேற்பு, நிச்சயதார்த்தம் மற்றும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் பொதுவானது. 2019க்கான பதிவுகள் இப்போதிலிருந்து தொடங்குகிறது. பதிவு செய்வதற்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**10. சந்தா உறைகள்:** சந்தா உறைகளை எடுத்து பங்கிற்கு பங்களிப்பு செய்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் 40% மக்கள் செலுத்தாமல் இருப்போர் தயவு செய்து உங்களின் வெறுமையான உறைகளை பங்கில் மீண்டும் ஒப்படைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் விநியோகிக்கப்பட்ட பட்டியலின்படி கணக்கறிக்கை செய்ய வேண்டியுள்ளது.

**11. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டட நிதி டிசம்பர் 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **442,696.80** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **499,716.53** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

06/01/19 திருப்பலி வசூல்கள்: காலை 7.00 - RM 1,447.70 காலை 9.00 - RM 1,879.70 ஜெலாப்பாங் - RM 166.30

மொத்தம்- RM 3,493.70 **2018** - RM 120.00 பராமரிப்பு- RM 2,094.80

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்